**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C No. 108 / 2024 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 2 |

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில் |
| Father's Name | : | சுந்தர்ராஜ் |
| Village | : | தம்பிரான்பட்டி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 39 |
| ACCUSED | | ரெங்கநாதன் – ஆஜர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2025.

**முதல் விசாரணை:–**

நான் பெரம்பலூர் மாவட்டம், தம்பிரான்பட்டி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகின்றேன். புகார்தாரர் செந்தில்குமாரை எனக்கு தெரியும். அவர் தற்போது சிங்கப்பூரில் உள்ளார். வழக்கு விபத்தில் இறந்து போன ராஜேந்திரனை எனக்கு தெரியும். செந்தில்குமார், ராஜேந்திரன் ஆகியோருக்கு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு விபத்து ஏற்பட்டது. செந்தில்குமாரும்,, ராஜேந்திரனும் இருசக்கர வாகனத்தில் தம்பிரான்பட்டிக்கு செல்லும் போது செஞ்சேரி – தம்பிரான்பட்டி பிரிவு ரோட்டில் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்தவுடன் நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். நான் பார்த்த போது ராஜேந்திரனுக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது, கை மற்றும் கால் உடைந்திருந்தது. செந்தில்குமாருக்கு காலில் காயம் ஏற்பட்டிருந்தது. காயம்பட்ட இருவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். விபத்து ஏற்பட்டு

சுமார் ஒரு வார காலம் கழித்து ராஜேந்திரன் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார். நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது விபத்து ஏற்படுத்திய கார் சம்பவ இடத்தில் இருந்தது. காரை ஓட்டி வந்த ஓட்டுநர் சம்பவ இடத்தில் இருந்தார், அவரை நான் பார்த்தேன். அவர் ஆஜர் எதிரி தான். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)</u>

விபத்தில் இறந்து போன ராஜேந்திரன் எனது மாமா ஆவார். விபத்து குறித்து எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்பதை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லையென்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில் உள்ள ராஜலட்சுமி மளிகை கடை வைத்திருக்கும் நபர் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். எனக்கு தகவல் கிடைத்து 3 அல்லது 4 நிமிடங்களில் சம்பவ இடத்திற்கு வந்து விட்டேன். விபத்து சாலையின் மையப்பகுதியில் நடைபெற்றதா என்றால் ராஜேந்திரன் என்பவர் ரோட்டின் நடுவில் கிடந்தார், செந்தில்குமார் ரோட்டின் இடது புறத்தில் கிடந்தார். எனக்கு போன் மூலம் தகவல் சொன்ன நபர் தான் எதிரியை அடையாளம் காட்டி இவர் தான் இடித்தார் என்று என்னிடம் சொன்னார். எனக்கு போன் மூலம் தகவல் சொன்ன நபரின் பெயர் தங்கவேல், புது நடுவலூரைச்சேர்ந்தவர். அவர் தற்போது கடன் தொல்லையால் ஊரை விட்டு சென்று விட்டார், எங்கிருக்கின்றார் என்று தெரியவில்லை. போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல, வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். விபத்து சமயத்தில் நான் செஞ்சேரிக்கு வரவில்லையென்றும், எனக்கு விபத்து குறித்து யாரும் போன் மூலம் தகவல் சொல்லவில்லையென்றும், விபத்தில் இறந்து போன நபர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை:– இல்லை.</u>

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**